# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 343/மா/2023**

**நாள்: 28.11.2024**

திருமதி P. மல்லிகா, சென்னை–55. .......... முறையீட்டு மனுதாரர்

1) ஆணையர், ஆவடி மாநகராட்சி. ......... எதிர்மனுதாரர்கள்
2) திரு.பாஸ்கர், சென்னை–55

சென்னை–55, I.A.F, ஆவடி, வெங்கடேஸ்வரா நகர், பாலவேடு மெயின்ரோடு, கதவு எண்.71/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி P. மல்லிகா என்பவரின் 03.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் 06.11.2023–ல் பெறப்பட்டு, 343/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–55, I.A.F, ஆவடி, வெங்கடேஸ்வரா நகர், பாலவேடு மெயின்ரோடு, கதவு எண்.71/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி P. மல்லிகா, என்பவர் தனது 03.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான் மேற்கண்ட முகவரியில் சுமார் 18 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். ஆவடி நகராட்சி நிர்வாகத்திடம் முறையாக அனுமதி பெற்று சொத்துவரி, வடிகால் வசதி வரி, குடிநீர் வரி முறையாக கட்டி 2 பெண் குழந்தைகள் மற்றும் வயதான தாயாருடன் கணவரை பிரிந்து வசித்து வருகின்றேன். திரு.பாஸ்கர் என்பவர் என் எதிர் மனையில் அடுக்குமாடி வீடு கட்டி 6 வருடங்களாக குடி இருக்கிறார். இவர் ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான பொது சாலையை ஆக்கிரமித்து (RAMP அமைத்து) கட்டிட கழிவுகளை பொது சாலையில் கொட்டியும் அவரது மதில் சுவரில் குழாய்களை அமைத்து கழிவுநீரை பொது சாலையில் விட்டும், வாகனங்களை நிறுத்தியும், அவரது வீட்டில் இடம் இருந்தும் எங்களுக்கு இடையூறு செய்து வருகிறார். 08.03.2018 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட கடிதத்தில் திரு.பாஸ்கர் 4 அடி உயரத்திற்கு பொது சாலையை உயர்த்தியும், அவரது வீட்டில் உள்ள கட்டிட கழிவுகளை கொட்டியும், என்னுடைய வாகனம் வெளியே எடுத்து செல்வதற்கு இடையூறாக இருப்பதாக புகார் மனு கொடுத்திருந்தேன். ஆவடி மாநகராட்சி ஆணையரிடமிருந்து எந்தவித பதிலும் வராததால், 03.05.2018 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் திரு.பாஸ்கர் வீடு கட்டியிருக்கும் மனை வரன்முறைபடுத்தப்பட்டதா, அடுக்கு மாடி கட்டிடம் கட்ட ஆவடி மாநகராட்சியில் அனுமதி பெறப்பட்டதா, பெறப்பட்டிருந்தால் கட்டிட அனுமதி எண் தெரிவிக்க கோரியிருந்தேன். ஆனால் இதற்கும் எந்தவித பதிலும் ஆவடி மாநகராட்சியிடமிருந்து வரவில்லை. மேலும் 26.07.2018

தலைமை தகவல் ஆணையர் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் ஆவடி மாநகராட்சி ஆணையர் எந்தவித நடவடிக்கை எடுக்காததை குறித்து, நடவடிக்கை எடுக்கும்படி மனு அளித்தேன். தலைமை தகவல் ஆணையரிடம் இருந்து விசாரணைக்கு என்னையும், ஆவடி மாநகராட்சி அலுவலரையும் அழைத்தார்கள். ஆவடி மாநகராட்சி அலுவலர் தனது பதிலில் திரு. பாஸ்கர் மனை அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ளதால் CMDA-வுக்கு Reg Scheme–ல் Frame work-க்கு அனுப்பப்பட்டுள்ளது என்கிற விபரத்தினை தெரிவித்தார்கள். 26.07.2018 அன்று வட்டாட்சியர் அவர்களுக்கு தனிநபர் ஆக்கிரமித்து வீடு கட்டியிருக்கிறார் அதை அகற்ற நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்திருந்தேன். இதற்கும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

ஆவடி மாநகராட்சியின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தேன். (W.P.No.29663 of 2018) இதனை தொடர்ந்து உயர்நீதிமன்றம் 30.11.2018 நாளிட்ட தீர்ப்பில் ஆவடி மாநகராட்சியை, திரு.பாஸ்கர் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை அகற்றும்படி ஆணை பிறப்பித்தது. உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி திரு.பாஸ்கர் ஆக்கிரமித்துள்ள இடத்தினை அகற்றி கொடுத்தனர். மேலும் 05.09.2019 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு மீண்டும் திரு.பாஸ்கர் என்பவர் சாய்வு சாலையை (RAMP) அமைத்து மறுபடியும் பொதுசாலையை ஆக்கிரமித்து எங்கள் வீட்டிற்கு போக முடியாமல் மீண்டும் இடையூறு செய்து வருவதாக மனு அளித்தேன். இதற்கும் ஆவடி மாநகராட்சியிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை. 08.11.2019 அன்று ஆவடி சுகாதாரத்துறை அதிகாரி அவர்களுக்கு புகார் மனு அனுப்பியும் எந்தவித பதிலுமில்லை. மேலும் 28.09.2020 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு திரு.பாஸ்கர் என்பவர் மீண்டும் 3 அடி உயர்த்தியும், சாய்வு சாலையை (RAMP) அமைத்தது தொடர்பாகவும், 08.03.2018 ஆவடி மாநகராட்சிக்கு அளித்த கடித நகல், 30.11.2018 நாளிட்ட உயர்நீதிமன்ற ஆணை நகல், ஆவடி மாநகராட்சிக்கு அளித்த நினைவூட்டு கடித நகல் சேர்த்து மனு அளித்திருந்தேன். மேற்கண்ட கடிதம் பெற்றுக்கொண்டதை தொடர்ந்து ஆவடி மாநகராட்சி ஆணையர் நேரடியாக பொது சாலையை பார்வையிட்டு 3 அடி உயர்த்தி இருந்ததையும் மற்றும் கழிவு நீர் ஓடுவதை பார்த்த ஆணையர் திரு.பாஸ்கர் அவர்களை கூப்பிட்டு கண்டித்து சென்றார். அதன்பிறகு 30.09.2020–ல் ந.க.எண்.5/10/2020/F2 (256, 478 மற்றும் 441)–ன் பிரிவின்படி ஆவடி மாநகராட்சி ஆணை பிறப்பித்து ஆக்கிரமிப்பு மற்றும் கழிவுநீர் விடுவதை அகற்றினார்கள். 21.12.2020 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பாதாள சாக்கடை, மழைநீர் கால்வாய் , தார்சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்கும்படி மனு அளித்திருந்தேன் இதற்கும் அவர்களிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்க பெறவில்லை. 27.09.2021 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு திரு.பாஸ்கர் என்பவர் நீதிமன்ற ஆணை மற்றும் நகராட்சி ஆணையை அத்துமீறி மீண்டும் RAMP அமைத்தும், கட்டிட கழிவுகளை சாலையில் கொட்டியும், கழிவுநீரை சாலையில் விட்டும் சுகாதார கேடு ஏற்படுத்தியும், அவருடைய வாகனத்தை எங்கள் வீட்டின் முன்பு நிறுத்தி என் வாகனம் வெளியே எடுக்க முடியாதபடி இடையூறு செய்தும், அவருடைய காரை எங்கள் கேட்டின் மீதும் தடுப்பின் மீதும் வேண்டுமென்றே மோதி தகராறு செய்து வருகிறார் என்று புகார் மனு அளித்திருந்தேன். ஆவடி மாநகராட்சியிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. 03.08.2022 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தற்போது திரு.பாஸ்கர் மூன்றாவது முறையாக இரவோடு இரவாக 16 அடி பொது சாலையை மறித்து (RAMP) அமைத்தும் போக்குவரத்துக்கு இடையூறு செய்கிறார் என்று ஆவடி மாநகராட்சிக்கு புகார் மனு அளித்திருந்தேன். இதற்கும் ஆவடி மாநகராட்சியிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கபெறவில்லை. 03.08.2022 அன்று 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் (Councilor) அவர்களுக்கு புகார் மனு அளித்திருந்தேன். அவரிடமிருந்தும் எந்தவித பதிலும் இல்லை. 13.02.2023 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 16 feet Road பொதுசாலை ஆக்கிரமிப்பு, கழிவுநீர் தெருவில் விடுவது குறித்து ஆவடி மாநகராட்சி நடவடிக்கை எடுக்காதது குறித்து புகார் அளித்தேன். என்னுடைய

புகாரை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் உடனடியாக அகற்றிட ஆவடி நகராட்சிக்கு உத்தரவு பிறப்பித்தார். ஆவடி மாநகராட்சி ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. 20.03.2023 அன்று மீண்டும் ஒரு புகார் மனு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆவடி மாநகராட்சியிடம் மீண்டும் ஆக்கிரமிப்பை அகற்றி கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்தார். ஆனால் ஆவடி மாநகராட்சி மாவட்ட ஆட்சியரின் உத்தரவினை மதிக்காமல் அலட்சியம் செய்து ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. 24.04.2023 அன்று மேல்முறையீட்டு மனு கொடுத்திருந்தேன். மாவட்டஆட்சியர் ஆவடி மாநகராட்சியிடம் திரு.பாஸ்கர் மீது FIR File பண்ணி ஆக்கிரமிப்பை அகற்றி கொடுக்கும்படி உத்தரவினை பிறப்பித்தார். ஆனால் ஆவடி மாநகராட்சி ஆக்கிரமிப்பை அகற்றி தரவில்லை. மேலும் திரு.பாஸ்கர் வேலை ஆட்களை வைத்து 2 அடி மட்டும் (RAMP) ஐ உடைத்து அந்த கழிவுகளையும் பொது சாலையில் கொட்டிவிட்டார். பொது சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றாதது தொடர்பாக ஆவடி மாநகராட்சி ஆணையரை நேரில் சென்று கேட்டதற்கு திரு.பாஸ்கர் மீது FIR/கிரிமினல் Case பதிவு செய்து உள்ளதாகவும் அதற்கான ரசீது என்னிடம் உள்ளது என்றும், T8 காவல் ஆய்வாளரை போய் கேளுங்கள் என்று கூறி விட்டார். இது தொடர்பாக 17.05.2023 அன்று T8 காவல் ஆய்வாளர் அவர்களை நேரில் சந்தித்து கேட்டதற்கு CSR போட்டு ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டோம் என கூறினார். எனக்கு தீர்வு கிடைக்காததால் 29.05.2023 அன்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மேல்முறையீடு மனு அளித்தேன். மாவட்ட ஆட்சியர் உத்திரவை ஏற்று 01.06.2023 அன்று திரு.பாஸ்கர் அமைத்திருந்த ஆக்கிரமிப்புகளை ஆவடி மாநகராட்சி அகற்றியது. இதனை தொடர்ந்து 02.06.2023 அன்று திரு.பாஸ்கர் மீண்டும் RAMP அமைத்தும், அவர் வீட்டு வாகனங்களை என் வீட்டின் கேட்டின் முன்பு நிறுத்தி தொடர்ந்து இடையூறு கொடுத்து வருகிறார். 17.10.2023 அன்று ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தொடர்ந்து புகார் அளித்தும் தீர்வு கிடைக்காததால் மேல்முறையீடு மனு அளித்தேன். இதற்கும் ஆவடி நகராட்சியிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. நான் கடந்த 08.03.2018 முதல் தொடர்ச்சியாக இன்று வரை 5 ஆண்டுகளுக்கு மேலாக போராடிக் கொண்டு இருக்கின்றேன். இதுவரை எனக்கு எந்த தீர்வும் கிடைக்கவில்லை. அய்யா அவர்கள் தயவு கூர்ந்து எனது மனுவை உடனடியாக பரிசீலனை செய்து பாதிக்கப்பட்ட எனக்கு நீதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 14.11.2023 நாளிட்ட அறிவிப்பு மற்றும் 05.08.2024 கடிதம் வாயிலாக ஆணையரிடம் கோரப்பட்டது.

3) ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 04.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் 1, மிட்டணமல்லி கிராமம், வெங்கடேஸ்வரா நகர் பகுதியில் திருமதி.மல்லிகா மற்றும் திரு.பாஸ்கர் இருவரின் வீடுகள் மட்டுமே உள்ள முட்டு சாலை ஆகும். திரு.பாஸ்கர் 16 அடி அகலம் கொண்ட பொதுப்பாதையில் அவர் வீட்டின் முன்புறம் போக்குவரத்திற்கு இடையூறாக சாய்வு தளம் (Entrance RAMP) அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக 08.03.2018 அன்று திருமதி.மல்லிகா அவர்கள் புகார் அளித்திருந்தார். இதனை தொடர்ந்து 28.11.2018 அன்று காலை 11.30 மணியளவில் அந்த ஆக்கிரமிப்பு மாநகராட்சி அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது. மேற்படி விவரத்தினை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதனை ஏற்று வழக்கு நடவடிக்கையின்றி முடிக்கப்பட்டது. 13.02.2023 அன்று திருமதி.மல்லிகா, மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் புகார் மனு அளித்ததை தொடர்ந்து 16 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமித்து அமைத்த சாய்வு தளத்தை (Entrance RAMP) திரு.பாஸ்கர் என்பவர் தாமாகவே முன்வந்து 15.02.2023 அன்று இரவே அந்த சாய்வு தளத்தை (Entrance RAMP) அகற்றிவிட்டார். இப்பொருள்

குறித்த விரிவான அறிக்கையை 16.02.2023 அன்று மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

20.03.2023 திருமதி.மல்லிகா மீண்டும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் திரு.பாஸ்கர் 16 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Entrance RAMP) அமைத்தது குறித்து புகார் அளித்திருந்ததை தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகளின் பணிக்கு இடையூறு செய்யும் வகையில் இருந்ததால் அவர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

24.04.2023 மற்றும் 29.05.2023–ல் மீண்டும் திருமதி.மல்லிகா அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் திரு.பாஸ்கர் 16 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Entrance RAMP) அமைத்தது குறித்து அதனை அகற்றுமாறும் கோரப்பட்டதை தொடர்ந்து காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களின் பாதுகாப்புடன் 01.06.2023 அன்று காலை 10.30 மணியளவில் 16 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்த சாய்வு தளம் (Entrance RAMP) மாநகராட்சி அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது.

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் அறிவுரைப்படி மாநகராட்சி அதிகாரிகளின் உத்தரவை மீறி, மாநகராட்சி அலுவலக பணிகளை பாதிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக திரு.பாஸ்கர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் ஆய்வாளர் T8 காவல் நிலையம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை 29.10.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி.மல்லிகா 29.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"நான் மேற்கண்ட முகவரியில் கணவரை பிரிந்து 2 பெண் குழந்தைகள் மற்றும் வயதான தாயார் ஆகியோருடன் 18 ஆண்டுகளாக வசித்து வருகின்றேன். ஆவடி மாநகராட்சியில் முறையாக சொத்து வரி, வடிகால் வசதி வரி, குடிநீர் வரி செலுத்தி வருகின்றேன். என் வீட்டின் எதிர் மனையில் திரு.பாஸ்கர் என்பவர் அடுக்குமாடி வீடு கட்டி 6 ஆண்டுகளாக வசித்து வருகிறார். இவர் ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான பொது சாலையை (RAMP) அமைத்து ஆக்கிரமித்து கட்டிட கழிவுகளை பொதுசாலையில் கொட்டியும், தொடர்ந்து இடையூறும் கொடுத்து வருகிறார்.

2018–ம் ஆண்டு முதல் ஆவடி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தொடர்ந்து இது குறித்து புகார் அளித்தும் தீர்வு கிடைக்காததால் மேல்முறையீடு மனு அளித்திருந்தேன். மேலும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கின் தீர்ப்பின்படி ஆக்கிரமிப்பினை அகற்றினார்கள். ஆனால் திரு.பாஸ்கர் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து, சாய்வு சாலை அமைத்தும் கழிவு நீரை சாலையில் விட்டும் இடையூறு செய்ததால் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் திரு.பாஸ்கர் மீது காவல்துறையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு ஆணையிட்டார். ஆனால் ஆவடி மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் தார் சாலையை உயர்த்தி திரு.பாஸ்கர் அவர்களுக்கு சாதகமாக நடந்து கொண்டார்கள். இதுவரை எவ்வித பதிலும், நிரந்தர தீர்வும் கிடைக்கவில்லை. ஆகவே தாங்கள் தயவு கூர்ந்து எனது மனுவை பரிசீலித்து திரு.பாஸ்கர் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை மற்றும் இழப்பீடு வழங்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு விட்டு பாதிக்கப்பட்ட எனக்கு நீதியும், நிரந்தர தீர்வும் வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) ஆவடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் (திட்டம்) 29.10.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி, மிட்டணமல்லி கிராமம், வெங்கடேஸ்வரா நகர் பகுதியில் திருமதி.P.மல்லிகா மற்றும் திரு.பாஸ்கர் ஆகிய இருவரின் வீடுகள் மட்டுமே உள்ள முட்டு சாலையாகும். அதில் திரு.பாஸ்கர் 16 அடி அகலம் பொதுப்பாதையினை அவர் வீட்டின் முன்புறம் போக்குவரத்துக்கு இடையூறாக சாய்வு தளம் (RAMP)அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக திருமதி.P.மல்லிகா கடந்த 08.03.2018 அன்று புகார் அளித்திருந்தார். இதனை தொடர்ந்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்திருந்தார். மேலும் 28.11.2018 அன்று காலை 11.30 மணியளவில் ஆக்கிரமிப்பினை மாநகராட்சி அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது. இதனை ஏற்று மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கையின்றி முடிக்கப்பட்டது.

மேலும் கடந்த 13.02.2023 அன்று திருமதி.P.மல்லிகா மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் 16 அடி பொதுப்பாதையினை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (RAMP) அமைத்திருப்பதாக புகார் அளித்திருந்தார். அதனை தொடர்ந்து திரு.பாஸ்கர் தாமாகவே முன்வந்து 15.02.2023 அன்று அவர் அமைத்திருந்த சாய்வு தளத்தை (RAMP) அகற்றிவிட்டார். திருமதி.P.மல்லிகா மீண்டும் 20.03.2023 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு திரு.பாஸ்கரன் என்பவர் 16 அடி பொதுப்பாதையினை மீண்டும் ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Entrance Ramp) அமைத்திருப்பதாக புகார் அளித்திருந்தார். எனவே மாநகராட்சி அதிகாரிகளின் பணிக்கு இடையூறு செய்யும் வகையில் திரு.பாஸ்கரன் என்பவர் மீண்டும், சாய்வு தளம் அமைத்திருப்பதால் அவர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க கோரி காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களுக்கு 21.03.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

திருமதி.P.மல்லிகா என்பவர் 24.04.2023 மற்றும் 29.05.2023 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் திரு.பாஸ்கர் என்பவர் 16 அடி பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Ramp) அமைத்திருப்பதாக மீண்டும் புகார் அளித்து அதனை அகற்றுமாறு கோரினார். காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அதிகாரிகளின் பாதுகாப்புடன் 01.06.2023 அன்று காலை 10.30 மணியளவில் திரு.பாஸ்கர் பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்திருந்த சாய்வு தளத்தை (Ramp) மாநகராட்சி அதிகாரிகளால் இடித்து அகற்றப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி மாநகராட்சி அதிகாரிகளின் உத்தரவை மீறி மாநகராட்சி அலுவலக பணிகளை பாதிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக திரு.பாஸ்கர் என்பவர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்''.

மனுதாரர் தெரிவித்தவாறு திரு.பாஸ்கர் அவர்கள் மீண்டும் அமைத்துள்ள சாய்வு தளத்தை (Ramp) விரைவில் அகற்றிட உரிய நடவடிக்கை 10 நாட்களுக்குள் எடுக்கப்படும். மேலும் கழிவுநீர் சாலைகளில் விடாமல் இருக்க, திரு.பாஸ்கர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படும். மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பாக தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு விதிமீறல் இருப்பின் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில், திருமதி P.மல்லிகா அவர்களின் எதிர்மனையில் வசிக்கும் திரு.பாஸ்கர் அவர்களை 26.11.2024 அன்று விசாரிக்கும்முகத்தான் அன்னாருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அந்த அழைப்பாணை பெற்றமைக்கு ஒப்புதல் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டது. ஆனால் எதிர் மனுதாரர் திரு.பாஸ்கர் 26.11.2024 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் தான் ஆஜராகாததற்கு இம்முறைமன்ற நடுவத்திற்கு கடிதம் வாயிலாகலோ, மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது தொலைபேசி வாயிலாகவோ எந்த தகவலும் அவரால் அளிக்கப்படவில்லை. இதற்கு இம்முறைமன்ற நடுவம் தனது கண்டனத்தை பதிவு செய்கிறது.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, புகைப்படங்கள் மற்றும் வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி, ஆணையரின் அறிக்கை மற்றும் புகைப்படங்கள், ஆவடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் (திட்டம்) அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறிப்பட்டன.

மனுதாரர் திருமதி.மல்லிகா தனது புகார் மனுவில் தன்னுடைய எதிர்மனையில் வசித்து வரும் திரு.பாஸ்கர் என்பவர் ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான பொது சாலையை ஆக்கிரமித்தும், சாய்வு தளம் அமைத்தும் (Entrance Ramp), கட்டிட கழிவுகளை பொது சாலையில் கொட்டியும், கழிவுநீரை விட்டும், வாகனங்களை பொது சாலையில் விட்டு தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் இடையூறு செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் 2018ஆம் ஆண்டு முதல் மாநகராட்சிக்கு புகார் அளித்து வந்துள்ளார். மேலும் இது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்திருந்தார். மாநகராட்சியானது 28.11.2018 அன்று காலை அந்த ஆக்கிரமிப்பினை அகற்றப்பட்டதை தொடர்ந்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமும் அதனை ஏற்று வழக்கு முடிக்கப்பட்டது.

இதன் பிறகும் திரு.பாஸ்கர் பல்வேறு கால கட்டங்களில் சாலையை ஆக்கிரமிப்பு செய்து சாய்வு தளம் (Entrance Ramp) கட்டுவதும், மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து வருவதும் நடந்துள்ளது. அதன் பின்னர் 24.04.2023 மற்றும் 29.05.2023 நாளிட்ட மனுதாரரின் புகாரினை தொடர்ந்து காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களின் பாதுகாப்புடன் 01.06.2023 அன்று ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் அறிவுரைப்படி திரு.பாஸ்கர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க கோரி காவல் ஆய்வாளர், T8 காவல் நிலையம் அவர்களுக்கு மாநகராட்சியின் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் பல ஆண்டுகளாக தனது கோரிக்கை தொடர்பாக தொடர்ந்து போராடி வருகிறார். திரு.பாஸ்கர் என்பவர் தொடர்ந்து பொதுப்பாதையினை ஆக்கிரமித்து மனுதாரருக்கு இடையூறு விளைவிப்பதான மனுதாரரின் குற்றச்சாட்டை ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆமோதிக்கிறது. எனவே, ஆவடி மாநகராட்சி இளநிலைபொறியாளர் (திட்டம்) தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு Tamil Nadu Urban Local Bodies Act, 1998 and Tamil Nadu Urban Local Bodies Rules, 2023–ன்படி உரிய நடவடிக்கை எடுக்க ஆவடி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட நாட்டில், மாண்பமை உயர்நீதிமன்ற ஆணை மற்றும் சட்டத்திற்கு உட்பட்டு இயங்கும் அரசு இயந்திரத்தின் அறிவுறுத்தல்களை யாரும் தொடர்ந்து அலட்சியம் செய்வதை ஏற்க இயலாது.

எனவே, இது போன்ற நிகழ்வு தொடரா வண்ணம் அவ்வப்போது கள ஆய்வு செய்து, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி.P.மல்லிகா,
எண்.71/1, பாலவேடு மெயின் ரோடு,
வெங்கடேஸ்வரா நகர்,
I A F, ஆவடி,
சென்னை–600 055.

2) திரு.பாஸ்கர்,
71/1A 1A, பாலவேடு மெயின் ரோடு,
வெங்கடேஸ்வரா நகர், I A F, ஆவடி,
சென்னை–600 055.

3) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032